**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.63 /2012**
**connected with**
**அசல் வழக்கு எண். 208/2011**

PW3 – முருகன் த/பெ மணி
நாள்–13.02.2024

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

சாட்சியம் சொல்ல நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் வந்தது. எனது சொந்த ஊர் கடவாசல் ஆகும். தாவா சொத்து எங்குள்ளது என்றால் செம்மங்குடி வட்டத்தில் உள்ளது. தாவா சொத்து உள்ள இடமும், எனது கிராமமும் வெவ்வேறு இடம் என்றால் சரிதான். 2–ம் வாதி எனது உறவினாரா என்றால் சரிதான். யார் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாலசந்திரன் வழக்கு தாக்கல் செய்துள்ளார். யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் ராமகிருஷ்ணன் மீது தாக்கல் செய்துள்ளார்.

தரப்பினர்களிடையே எத்தனை வழக்கு நடைபெறுகிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். யார் தாக்கல் செய்த வழக்கில் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் ராமகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ள வழக்கில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். 1–ம் வாதி எனது தாயார் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து யாருக்கு உரிமையாக இருந்தது என்றால் சிவசிதம்பரத்திற்கு உரிமையாக இருந்தது. சிவசிதம்பரம் யாரிடமிருந்து குத்தகை சாகுபடி செய்ய ஒப்புக்கொண்டார் என்றால் கோவிந்தசாமி படையாட்சியிடமிருந்து குத்தகை சாகுபடிக்கு ஒப்புக்கொண்டுள்ளார்.

மேற்படி விவரம் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான்.

சிவசிதம்பரம் எப்போது இறந்தார் என்றால் 2006–ல் இறந்தார். சிவசிதம்பரத்திற்கு எத்தனை மகன்கள் என்றால் 2 மகன்கள். அவர்களது பெயர்கள் சிவா , ராமகிருஷ்ணன் மற்றும் மகளின் பெயர் சீதா ஆகும். சிவசிதம்பரம் உயிருடன் இருந்தபோதே தாவா சொத்தை சிவாவிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் பார்த்துக்கொண்டிருந்தார். சிவா சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். சிவாவிற்கு கலா என்ற மனைவி உண்டு என்றால் சிவாவிற்கு திருமணமே நடைபெறவில்லை.

சிவாவிற்கும், கலாவிற்கும் திருமணம் நடைபெற்றது எனவும் அவர்களுக்கு பிறந்தவர் தான் பாபு என்றாலும் சரியல்ல. சிவா எங்கு இறந்தார் என்றால் சிதம்பரம் மருத்துவமனையில் இறந்தார். சிவா சீர்காழி நகரம், ஈசானியத்தெருவில் பன்னீர்செல்வம் நகரில் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் ஈசானியத்தெருவில் பன்னீர்செல்வம் நகரில் பாபுவிடம் தங்கி வந்த நிலையில் சிவா இறந்துவிட்டதாக நான் சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான்.

சிவா இறக்கும் சமயத்தில் பன்னீர்செல்வம் நகரில் தான் நிரந்தர முகவரில் இருந்து வந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிவா எப்போது இறந்தார் என்றால் 2006 அல்லது 2007 ஆம் வருடம் இறந்தார். சிவா இறந்தபிறகு தாவா சொத்து பாபுவின் வசத்தில் தான் இருந்து வந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை யார் யாருக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் பாலசந்திரனுக்கு ராமகிருஷ்ணன் கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார். கிருஷ்ணம்மாள் எப்போது இறந்தார் என்றால் 2006 ஆம் ஆண்டு இருக்கும்.

சிவசிதம்பரம் எனது தகப்பனார் இல்லை என்றால் சரிதான். சிவாவிற்கு பாபு தான் கொல்லி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சென்னையில் எந்த வருடத்திலிருந்து வேலை செய்து வருகிறேன் என்றால் 2000–ல் இருந்து மாதம் மாதம் வந்து செல்வேன். தாவா சொத்தை 1–ம் பிரதிவாதி ஆக்கிரமிக்கவில்லை என்றும், நான் வெளியூர்காரர் என்பதால் தாவா

சொத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும் வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.